Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.NO.67/2024, Cr.No.70/2024, Kurisilapet PS
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.7 Page.No.

| | |
|---|---|
| பெயர் | சக்திகணேசன் |
| வயது | 40 |
| தந்தை/கணவர் பெயர் | ஆறுமுகம் |
| தொழில் | உதவி மருத்துவ அலுவலர் |
| கிராமம் | அடியத்தூர் |
| மாவட்டம் | திருப்பத்தூர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 27th day of October 2025.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை (எதிரிகள் ஆஜர்)</u>**

நான் தற்போது திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.02.2024 அன்று காலை 09.20 மணியளவில் நான் பணியிலிருந்தபோது, தலுக்கண்வட்டம் கிராமத்தைச் சார்ந்த குமார் த/பெ. சேட்டு என்பவரை அவருடைய மனைவி சரண்யா சிகிச்சைக்காக அழைத்து வந்தார். 14.02.2024 அன்று 08.30 மணிக்கு அவரை 1 பெண் மற்றும் 3 ஆண் நபர்கள் பெயர் தெரியாத ஆயுதத்தால் தாக்கியதாக கூறினார் அவரை பரிசோதனை செய்ததில்,

1. வயிற்றின் மேல்பகுதியில் 3 செ.மீ. அளவில் தையல் போடப்பட்ட காயம் இருந்தது.

அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று காயச்சான்று வழங்கினேன். **அந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ.6 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.** காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

காயம்பட்டவருக்கு எற்பட்டிருந்த காயங்கள் புதிதாக ஏற்பட்டிருந்தது. ஏற்கனவே முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். அவருக்கு நெஞ்சின் மீது காயங்கள் இல்லை என்றால் சரிதான்.

காயம்பட்டவரை எந்த ஆயுதத்ததால் தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் அவரின் வீட்டினருகே நடந்ததாக கூறினார். கூர்மையான பொருளின் மீது மோதினால் மேற்கூறிய காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். சில மணி நேரங்கள் முன் காயம் ஏற்பட்டிருந்தால் லேசாக ஆறியிருக்க வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல, சில நாட்கள் ஆகும்.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

JUDICIAL MAGISTRATE NO.II

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,
Tirupathur.